I.D. 8/2023
05.02.2024

W.W.1 சுப்ரமணியன்
குறுக்கு விசாரணை

எதிர்மனுதார் கழகத்தில் எத்தனை தொழிற்சங்கங்கள் இருக்கின்றன என்றால் 9 தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. நீங்கள் எந்த வருடத்தில் இருந்து மனுதாரர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறீர்கள் என்றால் 2013-முதல் உறுப்பினராக இருக்கிறேன். மனுதாரர் ராஜேந்திரன் சம்பந்தப்பட் தொழிற்தாவா எந்த வருடத்தில் சமரச மையத்தில் எழுப்பப்பட்டது என்றால் 2008-ல் எனக்கு முன்னால் இருந்து பொது செயலாளர் காலத்தில் எழுப்பப்பட்டது. தொழிற்சங்க விதிகள் பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் தெரியும். எதிர்மனுதாரர் கழகத்திற்கு என்று நிலையாணை உள்ளது என்றால் உள்ளது. தவறு செய்யும் ஊழியர்களுக்கு அந்த நிலையாணையின் படி தான் தண்டனைகள் வழங்கப்படும் என்றால் அதில் முரண்பாடு உள்ளது நிலையாணையில் குறிப்பிட்டுள்ள தண்டனைகளை விட கூடுதலாகவும் குறைத்தும் கொடுக்கப்பட்டு வருகிறது. சிறிய தண்டனை கடுமையான தண்டனை என்ற வகை உள்ளது என்றால் சரி. சிறிய குற்றங்களுக்கு உள்விசாரணை தேவையில்லை என்றால் தேவைப்பட்டால் வைப்பார்கள். இந்த தொழிற்சங்கத்திற்கு என்று துணைவிதிகள் உள்ளது என்றால் சரி. மனுதாரர் ராஜேந்திரன் எந்த ஆண்டு முதல் உங்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக உள்ளார் என்றால் 1997-ம் ஆண்டு முதல் உறுப்பினராக உள்ளார். அதற்கான ஆவணம் இந்தநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தொழிற்சங்க உறுப்பினர் ஏதாவது கோரிக்கை வைத்தால் அது சம்பந்தமாக பொதுக்குழு கூட்டி தீர்மானம் போடுவீர்கள் என்றால் சரி. அவ்வாறு நிர்வாக குழுவை கூட்ட வேண்டும் என்றால் நிகழ்ச்சி நிரல் தயார் செய்து தான்

web copy

கூட்ட வேண்டும் என்றால் சரி. மனுதாரர் ராஜேந்திரன் தொழிற்சங்கத்திற்கு புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் கொடுத்தார் தண்டனை கொடுத்ததற்கான விபரங்களை கொடுத்து புகார் அளித்தார். மனுதாரரின் புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதுபோன்ற ஆவணத்தை நீங்கள் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு 15 வருடம் கழித்து காலதாமதமாக போடப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் ராஜேந்திரனுக்கு வழங்கப்பட்ட விபரம் பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தப்பட்ட தண்டனை விபரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது தெரியும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

தலைமை தாங்கும் அதிகாரி,
தொழிலாளர் நீதிமன்றம்,
திருச்சி

Copy